**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**காணொளிகாட்சி விசாரணை (Video Conference)**
**ஆணை நாள்: 04.06.2025**

**முன்னிலை**
**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

...............

**வழக்கு எண். SA1831/F/2025**

திரு. R.ஈஸ்வரன் ... மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்
விருதுநகர் மண்டலம், 6/377, சின்னமூப்பன்பட்டி,
மதுரை ரோடு விருதுநகர் - 626001 ... பொது அதிகார அமைப்பு

******

## ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.R.ஈஸ்வரன் அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.G.கண்ணன், பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட், விருதுநகர் மண்டலம், 6/377, சின்னமூப்பன்பட்டி, மதுரை ரோடு, விருதுநகர் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 21.09.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் செயல்முறை ஆணையின்படி 21.08.2024ம் நாள் முதல் செயல்படுத்தப்பட்ட விருதுநகர் நகராட்சி காமராஜர் (புதிய) பேருந்து நிலைய செயல்பாட்டுக்கான அறிவிக்கப்பட்டபடியாக விருதுநகர் மண்டலம் மற்றும் விருதுநகர் கிளையில் இருந்து இயக்கப்படும் நகர மற்றும் தொலைதூர (காரியாபட்டி, அருப்புக்கோட்டை, சிவகாசி, திருமங்கலம், எரிச்சநத்தம் உட்பட நகர பேருந்துகள்,

ஸ்ரீவில்லிபுத்தூர், கோவில்பட்டி, அருப்புக்கோட்டை, மதுரை மார்க்கம் பேருந்துகள் விருதுநகர் புதிய பேருந்து நிலையம் வழியாக இயக்கப்படுவதாலும் தங்களது நிர்வாகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை விபர தகவல்கள் (21.08.2024 முதல் தகவல் வழங்கும் காலம் வரை) அதன் சார்ந்த நகல்களும், தங்களது நிர்வாகத்தால் அரசின் பிற துறைகளுக்கு தெரிவிக்கப்பட்ட புகார் மற்றும் கோரிக்கை நகல்களும் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 07.11.2024 நாளிட்ட பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில், பொதுத்தகவல் அலுவலர், 16.11.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் 16.01.2025 நாளிட்ட பிரிவு 19(3)இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் காலம் கடந்து தகவல் வழங்கியுள்ளார் எனவும், தகவல் தாமதமானதால் அதன் பிறகு இரண்டு செயல்முறை ஆணைகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட், அவர்களின் மூலம் போடப்பட்டுள்ளது. எனவே, காலம் கடந்து பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவல் பயனற்ற தகவலாகும். எனவே அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய செயல்முறை ஆணைக்குப் பிறகு போடப்பட்ட இரண்டு செயல்முறை ஆணைகளைப் பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் ஏற்கனவே 02.06.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாகவும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரர் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கான தகவல்கள் மற்றும் மனுதாரர் கோரிய பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய செயல்முறை ஆணைக்குப் பிறகு போடப்பட்ட இரண்டு செயல்முறை ஆணைகளை ஒரு வார காலத்திற்குள் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது. உரிய காலத்திற்குள் வழங்காத தகவல், பயனற்ற தகவல் என ஆணையம் பதிவு செய்கின்றது. எனவே, இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் வழங்கி கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள முழுமையான தகவல்கள் மற்றும் அதன் பிறகு போடப்பட்ட இரண்டு செயல்முறை ஆணைகளை உரிய ஆவண நகல்களுடன் “தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு***

*வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA1831/F/2025</u>**
**<u>பெறுநர்</u>**
பொது தகவல் அலுவலர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்
விருதுநகர் மண்டலம், 6/377, சின்னமூப்பன்பட்டி,
மதுரை ரோடு விருதுநகர் - 626001

**<u>மனுதாரர்</u>**
திரு. R.ஈஸ்வரன்,
எண் 91, சிவந்திபுரம் தெரு, ஆத்துமேடு,
விருதுநகர் மாவட்டம் - 626001.

Copy to: Judgement File/ Spare.
JE / PA 05.06.2025.